**தலைப்பு 308 – தபால் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 308 – தபால் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஜனவரி 11 ஆம் திகதி தபால்மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 11,960.50 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 11,952.04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 8.46 மில்லியன் அதாவது 0.07 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 11,759.50 | 11,755.69 | 3.81 | 0.03 |
| மூலதனம் | 201.00 | 196.35 | 4.65 | 2.31 |
| மொத்தம் | **11,960.50** | **11,952.04** | **8.46** | **0.07** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

திணைக்களத்தினால் 2015 ஆண்டிற்கான 20.01.02.00 இலக்கம் கொண்ட வருமானக் குறியீட்டுக்காக ரூபா 7,000.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 6,710.88 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 95.87 சதவீதமாகும்.

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

#### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 30801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 764.95 | 609.05 | 644.95 | 704.53 | 2,200.00 | 1,659.37 |

## 2.4 கட்டுநிதி கணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட இலக்கம் 7002/0000/00/0098/0015/000 கொண்ட கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 527.95 மில்லியன் ஆக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் 06 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16.53 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0162/000 | 9.42 |
| 6000/0000/00/0001/0038/000 | 0.10 |
| 6000/0000/00/0002/0049/000 | 0.01 |
| 6000/0000/00/0013/0039/000 | 0.68 |
| 6000/0000/00/0016/0002/000 | 3.93 |
| 6000/0000/00/0018/0009/000 | 2.39 |
| மொத்தம் | **16.53** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

தபால் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 வங்கி நடைமுறைக் கணக்குகளில் தீர்க்கப்படாத காசு மீதி ரூபா 454,921 தொகை இருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத துணைக் கட்டுநிதி மீதி ரூபா 142,408 தொகை ஆக இருந்தது. 2016 ஆஸ்ட் 31 திகதி அளவில் அவற்றில் ரூபா 134,370 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 நவம்பர் 23 திகதிய 06/2015 ஆம் இலக்க திறைசேரியின் செயற்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி தீர்க்கப்பட வேண்டுமெனினும், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 450,648,654 தொகையான கட்டுநிதிக் கணக்கின் மீதி 2016 மார்ச் 23 திகதி 2016 ஆண்டின் கட்டுநிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 3,950,933 இற்கான காலங் கடந்த 16 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 வருமானக் கணக்கு

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் வருமானக் குறியீடு இலக்கம் 20-01-02-00 இன் வருமான மதிப்பீடுகள் தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகள் சமர்ப்பித்தல் ஆகிய பொறுப்புக்கள் சாட்டப்பட்டிருந்தன. இந்த வருமானக் குறியீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகள் தயாரிக்கும் போது பரீட்சை கட்டண கமிஷன், தொலைபேசி வருமான கமிஷன் மற்றும் இலவச த வருமானம் என்பவற்றை அடிப்படையாக எடுத்திருக்கவில்லை. எனினும் அந்த வருமான விடயங்களில் இருந்து முறையே ரூபா 2,892,957 மற்றும் ரூபா 2,162,501 தொகை மற்றும் ரூபா 39,114,344 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 44,169,802 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதி அளவில் நிலுவை வருமானம் ரூபா 2,991,412 தொகையாக இருந்தது. அந்த நிலுவை வருமானம் 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை அவ்வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வலைப் பின்னப்படுத்தப்பட்ட உதவிச் சேவைகளில் இருந்து கிடைக்கும் 06 வருமான விடயங்களின் வருமானம் கணனிப் பகுதியின் அறிக்கை மற்றும் வருமான

அறிக்கைகளிடையே ரூபா 80,892,440 இற்கான வித்தியாசங்கள் காணப்பட்டன.

(ஈ) 2015 ஆண்டின் தொடர்பாடல் இல்ல வருமானம் ரூபா 7,000,000 தொகை எனினும், அதனை 2014 ஆண்டிற்கான ரூபா 44,184,797 தொகையாகக் காணப்பட்டமையால் வருமானம் ரூபா 37,184,797 இனால் அதாவது 84.16 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

(உ) 2015 ஆண்டிற்கான தொடர்பாடல் இல்லங்களின் வருமானம் ரூபா 7,000,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை சீராக்கல்கள் மேற்கொண்ட பின்னர் மீதியில் இருந்து ஒரு தொகை தபால்மா அதிபரின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த வருமானத்தை மாற்றும் குறிப்பிட்ட முறைமை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் தொடர்பாடல் இல்லங்களின் வருமானத்தை சரியாக இனங்காண முடியாதிருந்தது.

(ஊ) 2015 ஜுலை 20 திகதிய 01/2015 ஆம் இலக்கம் கொண்ட பொதுநிதி கொள்கை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம், உரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட காலாண்டு வருமான அறிக்கைகள் காலவரையறை முடிவடைந்த திகதி முதல் 15 நாட்களுக்குள் பொதுநிதி கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக இணக்கக் கூற்று

---

விடய இலக்கம் 30801 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67,557,186 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதியில் ரூபா 50,099,550 தொகை 1 வருடம் முதல் 34 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதியை அறவீடு செய்யும் தொடர் நடவடிக்கை பலவீன நிலையில் இருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 30 திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அரச ஊழியர் ஒருவருக்கு செலுத்தக் கூடிய ஒட்டுமொத்த இடர் கடன் தொகை ரூபா 250,000 தொகையாக வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் 09 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுக்கு அந்த வரையறை மீது கவனம் செலுத்தாமல் இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் மாவட்டக் கணக்கு கட்டுப்பாட்டு கணக்கின் மீதிகளிடையே ரூபா 1,221,203 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஈ) மத்திய தபால் பரிமாற்றலின் ஊழியர் கடன் பதிவேடுகளில் மற்றும் கணக்கின் மீதிகள் இணங்கியிருக்காத 37 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ் வித்தியாசங்களின் கூட்டுத்தொகை ரூபா 892,393 தொகையாக இருந்தது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் படி செயற்பட்டு பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 201 மில்லியனுக்கான நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 155 மில்லியன் தொகையினை பயன்படுத்தல் தொடர்பான தகவல்கள் வருடாந்த பெறுகைகள் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நாரஹேன்பிட முத்திரை பாதுகாப்பறையில் ரூபா 308,947,810 இற்கான பெறுதிமதியுடைய முத்திரைகள்/ நினைவு சின்ன பத்திரங்கள் 12,049,049 தொகை மற்றும் முகப்புப் பெறுமதி குறிப்பிடப்படாத இராஜதந்திர முத்திரைகள் 616,000 விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) களஞ்சியத்தில் கூட்டுத்தொகை ரூபா 9,131,734 தொகை பெறுமதியான முத்திரை உறைகள், ஆரம்ப நாள் உறைகள், வாழ்த்துப் பத்திரங்கள் பல்வேறு அறிவூட்டல் புத்தகங்கள், காகிதாகிகள் மற்றும் முத்திரைப் புத்தகங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) மத்திய தபால் பரிமாற்றலில் 06 மோட்டார் வண்டிகள் நிறுத்தி வைத்திருத்தல் தொடர்பாக 2015 செப்தெம்பர் 23 திகதிய கணக்காய்வு ஐய வினாவின் மூலம் வினவப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 29 திகதிய தபால்மா அதிபரின் பதில் கடிதத்தின் பிரகாரம் தபால் போக்குவரத்து பிரிவில் இடவசதிகள் போதியளவு காணப்படாமையால் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவற்றில் 03 வாகனங்கள் வாகனப் படி பெறும் உத்தியோகத்தருக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்திருந்தார். மேலும் 04 வாகனங்கள் மிகையாக உள்ளன என 2015 ஜூன் 07 திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடித்தின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த வாகனங்கள் 2016 ஜூன் 26 திகதி வரை அவ் வளவில் அந்த வாகனங்கள் விளைவற்று நிறுத்தப்பட்டிருந்தன.

(iv) 02 வேன்கள் 2016 ஜூலை 26 திகதி வரை மத்திய தபால் பரிமாற்றல் பிரிவில் விளைவற்று நிறுத்தப்பட்டிருந்தது.

(v) மோட்டார் வாகனம் ஒன்று மத்திய தபால் பரிமாற்றலில் உக்கிய நிலையில் காணப்பட்டது. இந்த வாகனம் தபால், தபால் சேவை மற்றும் முஸ்லிம் மத விவகார அமைச்சிற்கு உரித்தானது என பதில் அளித்திருந்த போதிலும் அது அமைச்சுக்கு சொந்தமானதொன்றல்ல என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடாத்துதல்**

2014 அக்தோபர் 17 திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் மேற்கொள்ப்பட்டு அதனது அறிக்கை 2016 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் கொழும்பு, கழுத்துறை, மன்னார் மற்றும் கேகாலை ஆகிய தபால் அத்தியட்சகர் வட்டாரங்களில் 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை அவ் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

16 செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடுகளுக்கான செலவினங்களை மேற்கொண்ட பின்னர் மீதியை மிகைத்து ரூபா 81,704,624 இற்கான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

**3.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு** | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| **பொது நிருவாக சுற்றறிக்கை** | |
| 1990 அக்தோபர் 10 திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை 06 மாதத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3.9 செயலாற்றுகை**

2015 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளது.

**(அ) போதியளவாக நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

தபால் திணைக்களத்தினால் உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்து கீழே தரப்பட்டுள்ளது.

| **விவரம்** | **2014** | **2015** | **அதிகரித்தல்** | **அதிகரித்தல் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| வருமானம் | 6,557 | 6,711 | 154 | 2.35 |
| செலவு | 9,541 | 11,756 | 2,215 | 23.22 |
| செயற்பாட்டு பற்றாக்குறை | 2,984 | 5,045 | 2,061 | 69.07 |

(ஆ) 2015 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதனது முன்னேற்றத்தினை பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(i) 2015 ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு உத்தேசித்திருந்த ரூபா 23.28 மில்லியன் பெறுமதியான 07 செயற்திட்டங்களை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ii) 2015 ஆண்டின் போது செயற்படுத்துவது என திட்டமிடப்பட்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 23.74 மில்லியன் தொகை பெறுமதியான 11 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**3.10 வங்கிக் கணக்குகளை நெறிப்படுத்துவதில் குறைபாடுகள்**

**சீராக்கல் செய்ய வேண்டிய மீதி**

தலைமை அலுவலகத்தில் நடைமுறை கணக்கு ஒன்றில் 03 வருடங்களை விட மிகையான காலமாகக் காணப்படும் இணங்காணப்படாத ரூபா 50,000 தொகை 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டன, அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் செயற்பாடுகளில் இருந்து விளகல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

**(i) ஜனாதிபதித் தேர்தலுக்காக 115,000 பொலிசெக் வெற்று பைகள் ரூபா 6,954,200 தொகைக்கு பெற்றுக்கொள்ளல்**

வெள்ளை மற்றும் சிவப்பு பெரிய பொலிசெக் பைகள் முறையே 4,000 மற்றும் 15,000 வெள்ளை மற்றும் சிவப்பு சிறிய பொலிசெக் பைகள் 30,000 வீதம் 60,000 தொகையும் பெற்றுக்கொள்ளும் பெறுகைக்காக பதிவு செய்யப்பட்ட 06 வழங்குனர்களிடம் 2014 திசெம்பர் 08 திகதி விலைகூறல் அழைக்கப்பட்டிருந்தது. அதற்காக 04 நிறுவனங்களில் இருந்து விலைகூறல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 5:4. 10 வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றுகை பாதுகாப்புப் பத்திரம் ஒன்றினை பெற்றிருக்கவில்லை.

- சனாதிபதி தேர்தல் வேலைக்காக திறந்த கூறுவிலை கோரப்படாமல் வரையறுக்கப்பட்ட கூறுவிலையின் கீழ் விலைகூறல்கள் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பொலிசெக் பைகள் உரிய நாட்களில் வழங்கியிருக்காததுடன் அவ் வழங்கல்கள் 2015 அக்தோபர் மாத இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- விலைகூறல் பாதுகாப்புப் பத்திரம் தபால் மா அதிபரின் பேரில் சமர்ப்பிக்கப்படாத நிறுவனம் ஒன்றில் இருந்து வெள்ளை நிற பெரிய பை ஒன்று ரூபா 44.50 தொகைக்கு சமர்ப்பிப்பதற்கு விலைகூறல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆரம்ப மதிப்பாய்வின் போது அந்த விலைகூறல்காரரை அகற்றி ரூபா 77.11 வீதம் 40,000 பைகள் கொள்வனவு செய்வதற்கு 2014 அக்தோபர் 12 திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**(ii) 8500 சவல் பைகள் பெற்றுக்கொள்ளல்**

2015 பாராளுமன்ற தேர்தலின் போது தேர்தல் பத்திரங்கள் வினியோகிக்கப்படும் விடயங்களுக்காக 8500 சவல் பைகள் கொள்வனவு செய்வதற்காக 2015 மே 06 திகதி நேரடி கொள்வனவு ஒன்றின் கீழ் அரசு கூட்டுத்தாபன ஒன்றில் இருந்து மாத்திரம் நேரடிக் கொள்வனவு அடிப்படையில் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தேர்தல் விடயங்களுக்கான கொள்வனவு ஒன்றென குறிப்பிட்ட மேற்கூறிய பெறுகைள் தொடர்பாக சவல் பைகள் வழங்குதல்

கூட்டுத்தாபனத்தினால் 2015 ஆகஸ்ட் 06 திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டுமெனினும் 2015 ஆகஸ்ட் 25 திகதி வரை வழங்கியிருக்கவில்லை.

- குறிப்பிட்ட எண்ணிக்கையான பண்டங்களை வழங்குவதற்கு முடியாமையால் 2015 ஆகஸ்ட் 11 திகதி அந்த ஒப்பந்த வேலையை இரத்து செய்வதாகவும் செயலாற்றுகை முறியை உரித்தாக்குவதாகவும் அரச கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்திருந்தது. 2015 ஆகஸ்ட் 26 திகதி 5,047 சவல் பைகள் நாரஹேன்பிட களஞ்சியத்திற்கு குறிப்பிட்ட வழங்குனர் ஒப்படைத்திருந்தார். இங்கு 1 சதவீதம் தாமதத் தண்டம் மாத்திரம் அறவீடு செய்து செயலாற்றுகை முறியினை இரத்துச் செய்யாமல் இருக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- தேர்தல் தேவைகளுக்காக நேரடி கொள்வனவு என தீர்மானிக்கப்பட்ட இந்த பெறுகைகளுக்காக தேர்தல் செலவுகள் செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்திருந்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(iii) கடல் அஞ்சல் பைகளை வெளிநாட்டு அந்தங்களுக்கு எடுத்துச் செல்லல்**

---

கடல் தபால் அஞ்சல் பைகளை வெளிநாட்டு அங்தங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு 2014 ஆண்டிற்காக ரூபா 11,521,156 தொகையும் 2015 ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 7,693,780 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2015 ஆண்டிற்காக கடல் அஞ்சல் பைகள் வெளிநாட்டு அந்தங்களுக்கு எடுத்துச் செல்லும் பெறுகைகளுக்காக 2014 ஆண்டின் போது ஒப்பந்தத்தை பெற்றிருந்த நிறுவனம் உட்பட 05 விலைகூறல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. திணைக்களத்தினால் கோரப்பட்டிருந்த தகைமைகள் அல்லது அனுபவத்தை பூர்த்தி செய்திருக்காத காரணத்தினால் 2014 திசெம்பர் 19 திகதிய பெறுகைகள் குழுவின் தீர்மானத்தின் மீது அந்த விலைகூறலை இரத்துச் செய்து 2014 ஆண்டின் போது பெறுகைகளை பெற்றிருந்த நிறுவனத்தின் காலத்தை 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீடித்திருந்தது.

- அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 7.8.4(உ) வழிகாட்டலின் பிரகாரம் தகைமைகள் காணப்படாமை பாரிய விலகல் எனக் கணித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும், 2014 ஆண்டின் போது இந்த நிறுவனத்திற்கு தகைமைகள் காணப்படாமையால் சிறிய விலகல் என கணித்து செயற்பட்டிருந்தது. 2015 ஆண்டின் போது அந்த நிறுவனத்தின் விலைகூறலை ஆரம்ப கட்டத்திலேயே நிராகரித்திருந்தது.

- தகைமைகள் காணப்படாமைக்கு மேலதிகமாக வங்கி முறியினை தபால்மா அதிபரின் பேருக்கு சமர்ப்பிக்காமையால் விலைகூறலை நிராகரித்துள்ளது. எனினும், அந்த முறியினை தபால்மா அதிபர் பெற்றிருக்காவிடினும் அதனை பெறுகைகள் கணக்காளரின் பேரில் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகூறல் பாதுகாப்பு பத்திரம் செல்லுபடியாகும் பாதுகாப்பு பத்திரம் ஒன்றாகும்.

- இந்த நிறுவனத்தினால் 2014 ஆண்டின் போது சமர்ப்பித்திருந்த கூறுவிலைகளை விட 2015 ஆண்டின் போது சமர்ப்பித்திருந்த கூறுவிலைகளில் அதாவது கியூபிக் மீற்றர் ஒன்றிற்கு 17 பிரயாண அந்தங்களுக்கு கூட்டுத்தொகை 2,950 அமெரிக்க டொலர்கள் முதல் 2,670 அமெரிக்க டொலர்கள் வரை குறைவடைதல் ஏற்பட்டிருந்தது. அவ்வாறு குறைந்துள்ள விலைகூறல்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் கடந்த ஆண்டின் கூறுவிலைகளுக்கே 2015 ஏப்ரல் 30 திகதி வரை ஒப்பந்த வேலையை நீடித்திருந்தது.

- மேற்கூறிய பெறுகையை நிராகரித்த காரணத்தினால் 2015/2016 ஆண்டுகளுக்காக தகைமையுடைய சேவை வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதற்காக 2015 மார்ச் 15 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 73,177 தொகை செய்தித்தாள் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த பெறுகையில் முன்னைய வழங்குனருடன் 03 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் அனுப்பியிருந்ததுடன் அந்த 03 நிறுவனங்களும் கேட்டிருந்த அடிப்படை தகைமமைகளை நிறைவேற்றியிருக்கவில்லை. அதன் பிரகாரம் கடல் தபால் பைகள் போக்குவரத்திற்காக தபால் திணைக்களத்தினால் வேண்டப்பட்ட தகைமைகளை பெற்றுள்ள விலைகூறல்தாரர்கள் தொடர்ந்தும் முன் வராமையினால் மற்றும் அந்த தகைமைகளை திருத்தி அமைத்தல் தொடர்பாக பொருத்தமான செயற்பாடுகள் எடுத்திருக்கவில்லை.

- கடல் தபால் பொதிகளை வெளிநாட்டு அந்தங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக நிறுவனங்கள் தெரிவு செய்யும் போது திணைக்களத்தின் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைகள் குழுவினால் அவ்வவ் ஆண்டுகளின் போது நியமங்கள் ஏதும் இன்றி பல்வேறு நெறிமுறைகளை சமர்ப்பித்து இரத்து செய்வதன் மூலம் நிறுவனங்களை தெரிவு செய்தல் நடைபெற்றிருந்தது. அதன் பிரகாரம் கடல் அஞ்சல் பொதிகள் போக்குவரத்து செய்யும் பெறுகைகளில் அரசுக்கு மிகவும் அனுகூலமான முறையில் செயற்பட்டிருப்பதாக அவதானிக்கப்பட வில்லை. அத்துடன் முறையான செயற்பாட்டின் மூலம் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்தல் நடைபெறுவதாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**(iv) தபால்காரர்களுக்காக 8,000 மழையங்கிகள் கொள்வனவு செய்தல்**

---

சனாதிபதித் தேர்தல் வாக்குப் பத்திரங்கள் வினியோகிப்பதற்கு அதிக மழை காரணமாக முடியாதிருந்த நிலைமையில் அவசர சந்தர்ப்பம் ஒன்றென கணித்து ரூபா 8,800,000 தொகையொன்று செலவிடப்பட்டு 8,000 மழையங்கிகள் அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் இருந்து நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 29 ஆந் திகதி கூறுவிலைகள் பெறப்பட்டு 8,000 மழையங்கிகள் 2014 திசெம்பர் 29 ஆந் திகதி முதல் 2015 ஜனவரி 31 திகதி வரை கால வீச்சில் 04 பகுதிகளாக கிடைக்கக் கூடிய விதமாக கட்டளை அனுப்பப்பட்டிருந்தது. தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் 2014 திசெம்பர் 31 திகதி 423 மழையங்கிகள் மாத்திரம் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அதே நாள் அந்த 148 மழையங்கிகள் அம்பாறை பிரதான தபால் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சனாதிபதித் தேர்தல் அவசர தேவை எனக் கணித்து 8,000 மழையங்கிகள் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 423 மழையங்கிகள் மாத்திரம் கூட்டுத்தாபனத்தினால் வழங்கியிருந்தமையினால் மழையங்கிகள் பெற்றுக்கொண்ட தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு செய்யும் பெறுமதி ரூபா 500,000 இனை மிகைக்குமிடத்து உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் இந்த பெறுகைக்காக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- அரச பெறுகைளின் வழிகாட்டல் கோவையின் 5.4.10 வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றுகை பாதுகாப்பு பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

- போட்டி அடிப்படையில் கூறுவிலை கோரப்படாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த பெறுவனவு மீள் கட்டளை ஒன்றென தேர்தல் செலவுத் தலைப்பின் கீழேயே மேலும் 2,000 மழையங்கிகள் கொள்வனவு செய்வதற்கு 2015 ஏப்ரல் 04 ஆம் திகதி அக் கூட்டுத்தாபனத்திற்கே வழங்கப்பட்டிருந்தது.

- மீள் கட்டளையிடப்பட்ட 2,000 மழையங்கிகள் 2015 ஏப்ரல் 30 திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டுமெனினும் அவ் வழங்களும் 2015 மே 27 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(v) 4,000 சணல் கயிற்று முடிச்சுகள் மற்றும் 4,000 சணல் கயிறு பந்துகள் கொள்வனவு செய்தல்**

---

4,000 சணல் கயிற்று முடிச்சுக்கள் மற்றும் 4,000 சணல் கயிற்று பந்துகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,804,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இங்கு சணல் கயிற்று

பந்துகளுக்காக கிலோ 01 இற்கான குறைந்த விலை ரூபா 344.80 இற்கான விலையை நிராகரித்துவிட்டு ரூபா 364 வீதம் 4,000 சணல் கயிற்று பந்துகள் ரூபா 1,456,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்தது. சணல் கயிறு பந்துகள் தரம் குறைந்தவை என குறிப்பிட்டு குறைந்த விலை நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அதனது தரம் பற்றிய நியமத்தை பரிசோதனை மேற்கொள்ளும் அறிவுடைய ஒரு உத்தியோகத்தரின் உதவியை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

**(vi) பாதுகாப்பு பிளாஸ்டிக் இலட்சினை கொள்வனவு செய்தல்**

03 மில்லியன் பாதுகாப்பு பிளாஸ்டிக் இலட்சினைகள் கொள்வனவு செய்வதற்காக திறந்த கூறுவிலையின் கீழ் விலைகூறல் கோரப்பட்டிருந்தது. 2014 ஜுலை 31 திகதி கிடைத்திருந்த விலைகூறல்களை திறத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தொழிநுட்ப மதிப்பாய்வு அறிக்கை 03 மாத காலம் தாமதித்த பின்னர் 2014 அக்தோபர் 29 திகதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைகளை பூர்த்தி செய்து பண்டங்களை திணைக்களத்திற்கு பெறுவதற்கு 06 மாதங்களை விட மிகையான காலம் கடந்திருந்தது. பெறுகைகளுக்கு 21 நிறுவனங்களில் இருந்து விலைகூறல் சமர்ப்பித்திருந்ததுடன் அவற்றில் 19 நிறுவனங்களின் விலைகூறல்களை தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு நிராகரித்திருந்தது. மீதியாக 02 நிறுவனங்களில் ரூபா 6.83 குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கம்பனியின் விலைகூறலை நிராகரித்து ரூபா 8.30 வீதமான விலைகூறலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு 2014 நவம்பர் 07 ஆம் திகதி ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு முதலிடம் கொடுத்தல் என்ற ஏற்பாடுகளின் கீழ் பெறுகைகள் இந்த கம்பனிக்கு சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 7.9.6 வழிகாட்டலின் பிரகாரம் இடமளிக்கக் கூடிய 20 சதவீதம் கணித்தல் சபைக்கு பிரதிகூலமான விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- 2015 ஏப்ரல் 07 திகதி வரை வழங்கப்பட வேண்டிய ரூபா 750,000 பாதுகாப்பு பிளாஸ்டிக் இலட்சினை இரும்பு ஒன்று 2015 ஏப்ரல் 27 திகதி வரை வழங்கியிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது ரூபா 1.5 மில்லியனுக்கான கட்டளை ஒன்று 2015 ஏப்ரல் 27 திகதி அந் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதுகாப்பு பிளாஸ்டிக் இலட்சினை 4.5 மில்லியன் ரூபா 6.83 வீதம் கொள்வனவு செய்வதற்கு இயலுமாக இருந்தும் கூட ரூபா 8.30 இற்கு கொள்வனவு செய்திருந்தமையால் அரசுக்கு ரூபா 6.6 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**(vii) சீருடைப் துணி கொள்வனவு செய்தல்**

2015 ஆண்டிற்கான சீருடை துணி கொள்வனவு செய்வதற்காக 09 பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் 2015 ஏப்ரல் 23 திகதி விலைகூறல் அழைக்கப்பட்டிருந்தது. 2015 ஜூன் 11 திகதி அதாவது 03 மாத கால தாமதத்தின் பின்னர் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் விதப்புரை வழங்கப்பட்டிருந்தது. பெறுகைகள் குறிப்பிட்ட வழங்குனர்களுக்கு 2015 ஆகஸ்ட் 04 திகதி வழங்கியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் சீருடை துணி வழங்கப்பட வேண்டும். எனினும், 2015 ஆண்டிற்கான சீருடைப் பிடவை 10 மாத தாமத்தின் பின்னர் வழங்கப்பட்டிருந்தது.

- சீருடைப் பிடவை பெற்றுக்கொள்வதற்காக உரிய வழங்குனர்கள் தெரிவு செய்யும் போது துணிகளில் காணப்பட வேண்டிய தரம் தொடர்பாக கூறுவிலைகள் அழைக்கும் சந்தர்ப்பத்தில் தீர்மானித்திருக்கவில்லை. இதன் காரணமாக வழங்குனர்கள் சமர்ப்பித்திருந்த ஒவ்வொரு மாதிரிகள் மீது தரத்தை பற்றி பரிசோதனை மேற்கொண்டு சீருடைப் பிடவை வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

**(viii) இமதுவ அஞ்சல் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் நிர்மாணித்தல்**

சிறு நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் இமதுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் தபால் அலுவலக புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கும் படி மேற்கொள்ளப்பட்ட பிரதி சபாநாயகரின் வேண்டுகோளின் படி இமதுவ தபால் அலுவலகம் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு 2012 ஆண்டின் போது திரிப்பனே தபால் அலுவலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் நிதியேற்பாடுகளில் இருந்து இந்த தபால் அலுவலகம் நிர்மாணிப்பதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு 2012 திசெம்பர் 31 திகதி ரூபா 3 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கொடுப்பவு மேற்கொள்வதற்கு முன்னர் நிலத்தினை பரிசோதித்திருக்கவில்லை.

- கட்டிட பணிப்பாளர் நாயகத்தின் 2013 மார்ச் 06 திகதிய கடிதத்தின் பிரகாரம் உத்தேச காணியில் நீர் இறங்கி செல்வதற்காக வடிகால் முறைமையொன்று அமைத்தல், தடுத்து வைத்தல் மதில் நிர்மாணித்தல், நிலையற்ற மண் படுகையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றிற்காக மேலதிக செலவு ஒன்று மேற்கொள்ளவேண்டியிருந்தது. உத்தேச தபால் அலுவலகத்தினை நிர்மாணித்தல் நிதிசார் விதமாக பொருத்தமற்றதென கட்டிடத் திணைக்களம் நிர்மாண வேலைகள் மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் செலுத்தப்பட்ட ரூபா 3 மில்லியன் தொகையினை திருப்பி அறவீடு செய்திருக்கவில்லை.

- இந்த நிர்மாண வேலை மேற்கொள்வதற்கு உத்தேசித்த காணி பொருத்தமற்றது என பிரேரித்திருந்தத போதிலும், 2014 திசெம்பர் 23 திகதி தபால் அலுவலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தபால் திணைக்களம் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கையொப்பமிட்டிருந்தது.

- காணியின் கிரயத்துடன் செயற்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு ரூபா 8,587,965 தொகை ஆகியிருந்தது. அரச பெறுகைகளின் வழிகாட்டல் கோவையின் 5.4.4(1) வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியின் 20 சதவீதம் வேலை ஆரம்பிப்பு முற்பணம் என ரூபா 1,717,593 தொகை செலுத்த முடியும் எனினும் அதற்கு முரணாக அந்த அதிகார சபைக்கு 2014 திசெம்பர் 31 திகதி ரூபா 8,000,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

- இரு தரப்பினரிடையே கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 03 வது நிபந்தனையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு தேவையான அனைத்து அங்கீகாரங்களும் பெற்ற பின்னர் காணியுடன் சட்டரீதியாக உரித்தாக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே மீதித் தொகையாகிய ரூபா 587,965 செலுத்தப்பட வேண்டுமெனினும் காணியை சட்டரீதியாக உரித்தாக்காமல் மீதித் தொகை 2015 அக்தோபர் 20 திகதி செலுத்தப்பட்டிருந்தது.

- 2015 நவம்பர் 21 ஆம் திகதி குறைபாடுகளுடன் தபால் அலுவலக கட்டிடம் திறக்கப்பட்டிருந்தது.

**3.12 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளியிடப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றது.

(அ) 2015 ஜனவரி 09 திகதி முதல் 2015 திசெம்பர் 30 திகதி வரையான காலப் பகுதியில் நடைபெற்ற 27 வாகன விபத்துக்கள் தொடர்பாக நட்டங்கள் மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஆ) வத்தளை தபால் அலுவலக நட்டங்கள் சேதங்கள் என 1998 ஜனவரி 01 முதல் காணப்படும் ரூபா 3,861,791 தொகை தீர்க்கப்படாத நிதி நட்டம் ஒன்று நாளாந்த காசுக் கணக்கில் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 திகதி வரையும் அதனை தீர்த்திருக்கவில்லை.

(இ) நாரஹேன்பிட முத்திரை களஞ்சியத்தில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,196,150 தொகை பெறுமதியான முத்திரை பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதனைத் தீர்த்திருக்கவில்லை.

(ஈ) பழுதடைந்த மற்றும் அச்சுப் பிழை காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்த ரூபா 837,050 தொகை பெறுமதியான முத்திரைத் இருப்பு ஒன்று

களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அம் முத்திரை இருப்பினை ஏடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விபரங்கள் கீழே காணப்படுகின்றது.

(அ) தபால் திணைக்களத்தினால் வீதவரி தாமதித்து செலுத்தப்பட்டிருந்தது. சத்தாம் வீதி மற்றும் லோட்டஸ் வீதி தபால் அலுவலகங்களில் 1996 ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மற்றும் எல்விடிகல மாவத்தை தபால் அலுவலகத்தின் 2007 ஆண்டு முதல் காணப்பட்ட வீதவரி 2015 ஆண்டிலே செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு செப்தெம்பர் மாதம் வரை நிலுவை வீதவரியாக ரூபா 6,962,039 தொகை கொழும்பு மாநகர சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. வீதவரி செலுத்தும் போது ஒவ்வொரு ஆண்டினதும் வீதவரி ஜனவரி 31 திகதிக்கு முன்னர் செலுத்தினால் 10 சதவீத கழிவு ஒன்று கிடைக்கப்படுகின்றது. அவ்வாறு செய்யாமையினால் ரூபா 696,204 இற்கான கழிவு நலன்களை இழந்துள்ளது.

(இ) தபால் திணைக்களத்தின் திரிப்பனே புதிய தபால் நிலையக் கட்டிடம் ஒன்று நிர்மாணித்தல் தொடர்பாக ரூபா 210,152 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த போது அந்த நிர்மாண வேலை நிறுத்தப்பட்டமையால் செலுத்தப்பட்ட தொகை விளைவற்றதாக மாறியுள்ளது.

### 3.14 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) காசுக் கட்டணச் சேவை கணக்கு – 2014

திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள MORS மற்றும் E-pay மென்பொருட்களின் பலவீனங்கள் காணப்படுவதினால் காசுக் கட்டளைக் கணக்கில் பின்வரும் பலவீனங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2014 ஆண்டின் போது அனைத்துக் காசுக் கட்டளைகள் வழங்குதல் மற்றும் கொடுப்பனவுகளை கணனி மயப்படுத்தப்படாமையால் கணனி மயப்படுத்தப்பட்ட காசுக் கட்டளைகள் வழங்குதல், கொடுப்பனவு மற்றும் கமிஷன் வருமானம் பயன்படுத்த முடியாதிருந்தது.

(ii) கணனி வசதிகள் காணப்படாத உப தபால் அலுவலகங்களின் காசுக் கட்டளை பற்றிய தரவுகள், கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட கணக்காளர் அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படாமையால் அவை கணனிகளுக்கு உற்படுத்துவதில் தாமதம் காணப்பட்டது.

(iii) நாளாந்த காசுக் கட்டணம் அறிக்கை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாமை, அதற்காக தேவையற்ற காலமொன்று செலவிடப்படல் மற்றும் பி.ப. 2.00 இன் பின்னர் அதிகமான சந்தர்ப்பங்கள் அறிக்கைகள் பெற்றுக்கொள்ள முடியாமை அல்லது நாளாந்த காசு அறிக்கைக்காக காசுக் கட்டளை அறிக்கை நாளாந்தம் மாவட்ட கணக்கு அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு இயலாமல் போதல்.

(iv) சில சந்தர்ப்பங்களில் உறுதிப்படுத்தப்பட்ட காசு கட்டளைகளை முறைமைக்கு உட்படுத்த இயலாதிருந்தது.

(v) மென்பொருளுக்கு காசுக் கட்டளைகள் பெற்றுக்கொள்ளல், கொடுப்பனவுகளை மென்பொருளுக்குள் உட்படுத்திய போதிலும் பொழிப்பு அறிக்கையில் அவை காட்டப்படாமை.

(vi) மாவட்ட கணக்கு அலுவலகங்களில் செலுத்தும் கமிஷன் தொகை பற்றிய பொழிப்பொன்று பெற்றுக்கொள்ள முடியாமை.

(vii) காசுக் கட்டளை வழங்குதல், காசுக் கட்டளைகள் கொடுப்பனவு மற்றும் காசுக் கட்டளை கமிஷன் வருமானத் திணைக்கள கணனி மென்பொருள் ஊடாக பெற்றிருந்த மீதிகள், காசுக் கட்டளை இணக்கக் கூற்றின் பிரகாரம் பாரிய வித்தியாசங்கள் ஏற்பட்டிருந்தது.

மேற்கூறிய காரணங்களினால் கணனி மென்பொருட்கள் மூலம் பெற்றிருந்த தகவல்கள் சரியானவையாகக் காணப்படவில்லை. 2014 ஆண்டின் போது காசுக் கட்டளை கணக்கு இணக்கக் கூற்று தயாரிக்கும் போது மாவட்ட கணக்கு பொழிப்பின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கணக்கு பொழிப்பு மற்றும் கணக்கு பதிவு பிரிவில் இருந்து திறைசேரிக்கு அறிவித்திருந்த காசுக் கட்டளை மாதாந்த கணக்கு பொழிப்பினை அடிப்படையாகக் கொண்டு காசுக் கட்டளை சேவை கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வத்தளை அஞ்சல் அலுவலத்தின் பரிசோதனை**

---------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தபால்மா அதிபரின் 2013 ஜூன் 13 திகதிய மற்றும் 1/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வத்தளை தபால் அலுவலகத்தின் தபால் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட காசு வரையறை ரூபா 150,000 மிகையாக 2015 ஜூன் மாதத்தில் மாத்திரம் ரூபா 82,000 தொகையிலிருந்து ரூபா 2,593,000 தொகை வரை வீச்சு அளவுகளில் மிகைப் பணம் பேணப்பட்டிருந்தது. மேலும் கம்பஹா மாவட்ட கணக்கு அலுவலகத்தில் இருந்து 2015 ஜூன் 25 திகதி சம்பளம் செலுத்துவதற்காக ரூபா 766,258 பெறுமதியான காசோலை ஒன்று வழங்கியிருந்த போதிலும் அதனை காசாக மாற்றாமல் கையில் காசில் இருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) முத்திரைகளின் மூலம் கிடைக்கும் வருமானம் நாளாந்தம் அனுப்பப்பட்டிருக்காததுடன் 2015 ஜூன் 25 திகதி வரை முத்திரையில்

இருந்து கிடைத்த வருமானம் ரூபா 186,365 தபால் அதிபரின் பொறுப்பில் காணப்பட்டது.

(iii) நாளாந்த காசுக் கணக்கு நாளாந்தம் தயாரிக்கப்பட்டு சமப்படுத்த வேண்டும். எனினும் 2015 ஜூன் 24 திகதி நாளாந்த காசுக் கணக்கு (cash sheet) கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூன் 25 திகதி வரை தயாரித்திருக்கவில்லை.

**(இ) வாகனக் கட்டுப்பாடு**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) யுத்த களத்தில் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவை என குறிப்பிடப்பட்டிருந்த 15 வாகனங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் 2016 ஜூன் 26 வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) தபால் திணைக்களத்தின் தலைமை அலுவலர்களின் கடமைகளுக்காக தேக்க வாகனங்கள் வழங்குவதற்கு பதிலாக 08 உத்தியோகத்தர்களுக்காக ஒவ்வொரு வாகனங்கள் வீதம் ஒதுக்கப்பட்டு எரிபொருள் வரையறை ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவ் அலுவலர்களின் தற்துணிவின் பிரகாரம் வாகனங்களை பயன்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) தொடர்பாடல் இல்லம்**

----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ‘‘தொடர்பாடல் இல்லம்’’ (தபால் கடை) தலைமை தபால் அலுவலத்திற்கு நெருக்கமாக அமைந்திருந்த போதிலும், தொடர்பாடல் இல்லங்களை செயற்படு நிலைமை தொடர்பாக பரிசோதனையின் போது அமைக்கப்பட்டிருந்த 91 தபால் கடைகளில் 2016 மார்ச் 29 திகதி வரை 45 கடைகள் செயற்படாத நிலையில் காணப்பட்டது.

(ii) தொடர்பாடல் இல்லத்திற்கு கிடைக்கும் விற்பனை வருமானம் பிரதான காசாளருக்கு நாளாந்தம் அனுப்பப்பட வேண்டும். எனினும் மாத்தறை தொடர்பாடல் இல்லத்தில் 2012 ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் ரூபா 268,701 இற்கான பெறுவனவுகளை அனுப்பியிருக்கவில்லை. இப் பணத்தினை பெற்றுக்கொள்வதற்காக 2016 மே 26 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் ஒரு அலுவலர் 2015 மார்ச் மாதத்தில் ஓய்வு பெற்றிருந்ததுடன், ஓய்வூதிப் பணிக்கொடையை செலுத்த முன்னர் அப் பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2013 மே 09 திகதி தொடர்பாடல் இல்லத்தில் கடமையை கையேற்ற தபால் சேவை பெண் உத்தியோகத்தருக்கு முன்னர் கடமையாற்றிய

உத்தியோகத்தரினால் வழங்கியிருந்த ரூபா 83,942 தொகையினை அனுப்புவதற்காக 03 மாதங்களை விட மிகையான காலம் தாமதமடைந்துள்ளது.

(iv) மேலும் தொடர்பாடல் இல்லத்தில் விற்பனை வருமானத்தில் பெறுவனவுகள் தினமும் அனுப்பாமல் தாமதித்து அனுப்பியதன் காரணத்தினால் அரசாங்க பணம் கையாடலுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதே போல் 01 மாதம் முதல் 07 மாதம் வரையான காலம் தாமதித்து ரூபா 1,295,885 தொகை அனுப்பப்பட்டிருந்தது.

(v) தொடர்பாடல் இல்லங்களின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 2000 நவம்பர் 07 திகதி 14/2000 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஏப்ரல் 30 திகதி வரை செயற்படுத்தப்பட்ட 46 தபால் தொடர்பாடல் இல்லங்களில் மாதாந்த நிதி அறிக்கை தொடர்ந்து வரும் மாதத்தில் 10 திகதிக்கு முன்னர் அதன் பிரதி ஒன்று தபால்மா அதிபருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

- தொடர்பாடல் இல்லங்களில் ஒவ்வொரு மாத முடிவிலும் இலாப நட்டக் கணக்கு ஒன்று தயாரிக்கப்பட்டு இலாபம்/ நட்டத்தினை இனங்கண்டிருக்கவில்லை.

- மேற்கூறிய சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்ட கணக்கு அலுவலகத்தினால் பேணப்பட வேண்டிய காசுக் கணக்கு, மூலதனக் கணக்கு, கொள்வனவுக் கணக்கு, இருப்புக் கணக்கு, வருமானக் கணக்கு, விற்பனைக் கணக்கு, மேந்தலைக் கிரயக் கணக்கு, நிலையான சொத்துக்கள் கணக்கு ஆகிய பேரேட்டுக் கணக்குகள் காலி மற்றும் மாத்தறை தொடர்பாடல் இல்லங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை.

- மேற்கூறிய சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு வருட இறுதியிலும் தொடர்பாடல் இல்லத்தில் நிதி விளைவுகள் மற்றும் நிதி நிலைமை வெளிப்படுத்தக் கூடிய விதமாக இலாப நட்டக் கணக்கு மற்றும் ஐந்தொகை என்பன தயாரிக்கப்பட வேண்டும். எனினும் மாத்தறை மற்றும் காலி தொடர்பாடல் இல்லங்களில் 2002 ஆண்டு முதல் அந்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை.

- மேற்கூறிய சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தொடர்பாடல் இல்லங்களில் பேணப்பட வேண்டிய கணக்கு புத்தகங்கள் கோவைகள் மற்றும் பதிவேடுகள் காலி மற்றும் மாத்தறை தொடர்பாடல் இல்லங்களில் பேணப்பட்டிருக்கவில்லை.

**(உ) மேலதிக நேர வேலைப்படி செலுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயம் 3.2 ஆம் பிரிவுக்கு முரணாக கடமை நேரத்தில் சேவையாற்றியதற்காக உளத் தாக்கம் மற்றும் மேலதிக நேர அணவல் என கணித்து உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரப் படி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயம் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் திணைக்களமொன்றில் ஏதும் மேலதிக நேர வேலை காணப்படுமிடத்து உள்ளக செயல்முறை ஒன்றின் மூலம் அல்லது மேலதிக பதவியணியினர் சேர்க்கப்பட்டு மேலதிகநேர வேலையை தவிர்த்துக் கொள்வதற்காக மாற்றத்தகு மேலதிக நேர வேலைப் படி ஏற்படுத்துமாறு தாபன பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுக்க முடியும். எனினும் திணைக்களத்தினால் அவ்வாறு செயற்படாமல் அமைய கட்டணத் தொகைகளின் அடிப்படையில் மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேல் அத்தியாயத்தின் 3.6 பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் விடுமுறையில் சென்றிருந்தார். அப்படியின்றேல் பதவி வெற்றிடமாகிய காரணத்தினால் மாத்திரம் பதவியில் கடமைகளை அணவல் செய்வதற்காக மேலதிக நேரச் சம்பளம் அனுமதிக்கக் கூடாது எனினும், தபால் திணைக்களத்தினால் வெற்றிட மேலதிக நேரம் மற்றும் மேவகை மேலதிக நேரம் என தொடர்ச்சியாக மேலதிக நேரப் படி செலுத்தப்பட்டிருந்தது.

(vi) மேலே அத்தியாயத்தில் 6.1 பிரிவின் படி ஒரு மணித்தியாலத்திற்கு செலுத்த வேண்டிய சாதாரண மேலதிக நேரப்படி தொகை ஒரு நாள் சம்பளத்தில் 1/8 ஆகும். மாதாந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பாக நாட் சம்பளம் கணக்கிட வேண்டிய முறை இணைந்த மாதாந்தச் சம்பளத்தில் 1/30 தொகையின் படி எனினும் தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மேலதிக நேர மணித்தியால எண்ணிக்கைக்கு 25 சதவீதம் சேர்த்து பணிக்கொடை மேலதிக நேரம் என படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(v) மேலே அத்தியாயத்தின் பிரிவுகள் 7.1 மற்றும் 7.2 பிரிவுகளின் படி வெற்றிடமான பதவியொன்றில் கடமையினை அணவல் செய்வதற்காக மேற்கொள்ளும் மேலதிக நேரவேலை உட்பட ஒரு மாதத்திற்கு 20 மணித்தியாலங்களை விட கூடுதலாக, செலுத்தக் கூடாது எனவும் மற்றும் அதிவிஷேட சந்தர்ப்பங்களில் அதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறான விஷேட அங்கீகாரம் இன்றி நிதிப்பிரமாணங்கள் 135 இன் அதிகாரம் கையளிப்பினர் மீது 40, 60, 80 மற்றும் 120 மணித்தியாலங்கள் ஆக மேலதிக நேரப்படி செலுத்துதப்பட்டிருந்தது. பிரதி தபால்மா அதிபர், பிரதான கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய உத்தியோகத்தர்களும் மேலதிக நேரம் வேலைக்காக அங்கீகாரம் வழங்கியிருந்தனர்.

(vi) தகவல் தொழிநுட்ப பிரிவில் 2015 ஆண்டு முதல் நவம்பர் மாதம் வரை 12 உத்தியோகத்தர் முதல் 17 வரை வீச்சில் குழு ஒன்றிற்கு

கூட்டுத்தொகை ரூபா 878,743 தொகையான மேலதிக நேரச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. இங்கு 06 உத்தியோகத்தர்கள் 23 சந்தர்ப்பங்களில் வழமை அல்லாத விதமாக 02 நாட்கள் மற்றும் 03 நாட்கள் சேவையாற்றியதாக பதிவு செய்து மேலதிக நேரப்படி பெற்றிருந்தனர்.

(vii) தபால் மத்திய நிலையத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் படிகள் மற்றும் பிரயாணச் செலவு உறுதிச் சான்றுகள் பரிசோதித்தல், அதற்காக கொடுப்பனவு விடயங்களுக்காக முற்பணமாக காசோலை வழங்குதல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் அவர்களது நாளாந்த கடமைகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளல்களுக்காக விரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்யாமல் மேலதிநேர கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தி அப் பதிவுகளின் பிரகாரம் மேலதிகமாக வேலை செய்த மணித்தியாலங்களுக்காக மேலதிக நேரப்படி செலுத்த வேண்டும் எனினும் இவ்வாறான அங்கீகாரம் வழங்கப்படுவதன் மூலம் மேலதிக மணித்தியாலங்கள் கணிக்கப்படாமல் கடமை நேரத்திலேயே மேலதிக நேரப்படி பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 3.13 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பாக நிலைமை பின்வருமாறு ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடி யான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக் கை | மிகை களின் எண்ணிக் கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 121 | 87 | 34 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 147 | 55 | 92 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 8,854 | 7,529 | 1,325 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 17,659 | 16,728 | 931 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 08 | - | 08 |
| | **மொத்தம்** | **26,781** | **24,407** | **2,382** | **08** |